## 38. எங்க பெலத்தால் அல்ல

### பல்லவி

எங்க பெலத்தால் அல்ல
எங்க சக்தியால் அல்ல
உங்க ஆவியினால் எல்லாம் கூடுமே
தேவ ஆவியினால் எல்லாம் நடக்குமே

### அனுபல்லவி

*ஆவியானவர் என் ஆவியானவர்*
*என்னை நடத்தும் துனையானவர்*

### சரணங்கள்

1. பெரிய பர்வதம் நீ எம்மாத்திரம்
தேவ பிள்ளை முன் சமமாகுவாய்
தலைகல்லாகிய கிறிஸ்துவுக்குள்
கிருபையினால் கட்டப்படுகிறோம்
- எங்க பெலத்தால்

2. தேவ அபிஷேக ஆவியானவர்
சகல சத்தியத்தை போதிக்கிறார்
பிசாசின் தந்திரங்களை அறிந்துகொள்ள
வேத வார்தையில் உணர்த்துகிறார்
- எங்க பெலத்தால்

3. மணவாளனுக்கு ஏற்றவாளாய்
மணவாட்டியை அலங்கரிக்கிறார்
கற்புள்ள கன்னிகையாய் நிறுத்திடவே
அனுதினம் ஆயத்தம் படுத்துகிறார்
- எங்க பெலத்தால்